1. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.

பண்டைக்காலத்தில் அரசன் போர் செய்யக் கருதியவுடன், அவனது போர்ப்பறை முழங்கும். அப்பறையின் ஓசை நாற்றிசையும் அதிரச்செய்யும். அவ்வோசையைக் கேட்ட போர் வீரர்கள் போர்க்கோலம் பூண்டு மிக்க ஆர்வத்தோடு போருக்குப் புறப்படுவார்கள். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நாற்படைகளும் திரண்டெழும். அரசன் படைத்தலைவரோடு சென்று அவற்றைப் பார்த்து மகிழ்வான். போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன் தன் அரண்மனை வீரர்களுக்குப் பெருவிருந்து அளிப்பான். அதனைப் "பெருஞ்சோறு அளித்தல்" என்பர். சேனை புறப்பட்டுச் செல்லும் வழியில் அரசனும் படைத்தலைவர்களும் தங்குவதற்குரிய பாடி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு அரசனும் வீரரும் இளைப்பாறுவர். அப்பொழுது ஆடலும் பாடலும் நடைபெறும். போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடும் வழக்கம் எவருக்கும் கிடையாது. எதிரியைத் தாக்கிச் சண்டையிடும் போதும் மார்பில் தான் தாக்க வேண்டும். முதுகில் தாக்குதல் நடத்தக்கூடாது. எதிரிகள் நிறைய பேர் ஒருவனைச் சூழ்ந்து கொண்டு தாக்கினாலும் தனியொருவனாக நின்று அவர்களைச் சமாளித்து தூக்கி வெற்றி பெறுபவனை "ஆளறி பிள்ளை" என்பர்.

வினாக்கள்:

I. போர் துவங்கியதை அறிவிக்கும் கருவி எது?

அ) புல்லாங்குழல். ஆ) மேளம்
இ) போர்ப்பறை ஈ) நாதஸ்வரம்

II. ஓசையைக் கேட்டவுடன் எவை திரண்டெழும்?

அ) நாற்படைகளும் ஆ) தேர்ப் படை
இ) யானைப் படை ஈ) குதிரைப் படை

III. அரசன் அரண்மனை வீரர்களுக்கு விருந்தளிப்பதை --------------------- என்பர்.

அ) கடமை ஆ) போர் முறை
இ) விருந்து ஈ) பெருஞ்சோறு

அளித்தல்

IV. அரசனும் படைத்தலைவர்களும் தங்குமிடத்தை எவ்வாறு அழைப்பர்?
அ) அறுபடை ஆ கோவில்
இ) பாடி வீடு ஈ) அரண்மனை

V. தனியொருவனாக எதிரியைத் தாக்குபவனை எவ்வாறு அழைப்பர்?
அ) நாயகன் ஆ) ஆளரி பிள்ளை
இ) இளைஞர் ஈ) பெருவீரன்

2. பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.

வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழ் எழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவம் ஆகும். சேரமண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் ‘கண்ணெழுத்துகள்’ என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி என்னும் தொடரால் அறியலாம்.

வினாக்கள்:

I. வட்டெழுத்து என்பது எந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.

அ) நேரான கோடுகள்　　ஆ) சீரான கோடுகள்

இ) வளைந்த கோடுகள்　　ஈ) நிமிர்ந்த கோடுகள்

II. சேரமண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் 8 முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் எந்த எழுத்தகள் இடம்பெற்றுள்ளன?

அ) ஓவிய எழுத்து　　ஆ) வட்டெழுத்துகள்

இ) தமிழெழுத்துகள்　　ஈ) கண்ணெழுத்துகள்

III. யாருடைய ஆட்சிக் காலத்தில் 11 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்பட்டன?

அ) இரண்டாம் இராசராச சோழன்

ஆ) மூன்றாம் இராசராச சோழன்

இ) பல்லவ மன்னன்

ஈ) முதலாம் இராசராச சோழன்

IV. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகளை என்னவென்று அழைத்தனர்?

அ) கண்ணெழுத்துகள்　　ஆ) வட்டெழுத்துகள்

இ) ஒலி எழுத்துகள்　　ஈ) ஓவிய எழுத்துகள்

V. "கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி" என்னும் தொடர் எந்த இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது?

அ) மணிமேகலை

ஆ) சிலப்பதிகாரம்

இ) சிற்றிலக்கியம்

ஈ) வளையாபதி